ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ கிடந்த நம்பி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ கிடந்த நம்பி ॥

## திருநறையூர் - 7

‡கிடந்த நம்பி குடந்தை மேவிக்⋆ கேழலாயுலகை
இடந்த நம்பி⋆ எங்கள் நம்பி⋆ எறிஞர் அரண் அழிய⋆
கடந்த நம்பி கடியார் இலங்கை⋆ உலகை ஈர் அடியால்⋆
நடந்த நம்பி நாமம் சொல்லில்⋆ நமோ நாராயணமே (1)

விடந்தான் உடைய அரவம் வெருவச்⋆ செருவில் முன நாள்⋆ முன்
தடந் தாமரை நீர்ப் பொய்கை புக்கு⋆ மிக்க தாளாளன்⋆
இடந்தான் வையம் கேழல் ஆகி⋆ உலகை ஈர் அடியால்⋆
நடந்தானுடைய நாமம் சொல்லில்⋆ நமோ நாராயணமே (2)

பூணாதனலும் தறுகண் வேழம் மறுக⋆ வளை மருப்பைப்⋆
பேணான் வாங்கி⋆ அமுதம் கொண்ட பெருமான் திருமார்வன்⋆
பாணா வண்டு முரலும் கூந்தல்⋆ ஆய்ச்சி தயிர் வெண்ணெய்⋆
நாணாதுண்டான் நாமம் சொல்லில்⋆ நமோ நாராயணமே (3)

கல்லார் மதிள் சூழ்⋆ கச்சி நகருள் நச்சிப்⋆ பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க⋆ இருந்த அம்மான்⋆ இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம்⋆ வில்லால் முனிந்த எந்தை⋆ விபீடணற்கு
நல்லானுடைய நாமம் சொல்லில்⋆ நமோ நாராயணமே (4)

குடையா வரையால்⋆ நிரை முன் காத்த பெருமான்⋆ மருவாத
விடை தான் ஏழும் வென்றான்⋆ கோவல் நின்றான்⋆ தென்னிலங்கை
அடையா அரக்கர் வீயப் பொருது⋆ மேவி வெங்கூற்றம்⋆
நடையா உண்ணக் கண்டான் நாமம்⋆ நமோ நாராயணமே (5)

கான எண்கும் குரங்கும்⋆ முசுவும் படையா⋆ அடல் அரக்கர்
மானம் அழித்து நின்ற⋆ வென்றி அம்மான்⋆ எனக்கென்றும்
தேனும் பாலும் அமுதும் ஆய⋆ திருமால் திருநாமம்⋆
நானும் சொன்னேன் நமரும் உரைமின்⋆ நமோ நாராயணமே (6)

www.prapatti.com

நின்ற வரையும் கிடந்த கடலும்⋆ திசையும் இரு நிலனும்⋆
ஒன்றும் ஒழியா வண்ணம்⋆ எண்ணி நின்ற அம்மானார்⋆
குன்று குடையா எடுத்த⋆ அடிகளுடைய திருநாமம்⋆
நன்று காண்மின் தொண்டீர்! சொன்னேன்⋆ நமோ நாராயணமே (7)

கடுங்கால் மாரி கல்லே பொழிய⋆ அல்லே எமக்கென்று
படுங்கால்⋆ நீயே சரண் என்று⋆ ஆயர் அஞ்ச அஞ்சாமுன்⋆
நெடுங்கால் குன்றம் குடையொன்றேந்தி⋆ நிரையைச் சிரமத்தால்⋆
நடுங்கா வண்ணம் காத்தான் நாமம்⋆ நமோ நாராயணமே (8)

பொங்கு புணரிக் கடல் சூழ் ஆடை⋆ நில மா மகள் மலர் மா
மங்கை⋆ பிரமன் சிவன் இந்திரன்⋆ வானவர் நாயகர் ஆய⋆
எங்கள் அடிகள் இமையோர்⋆ தலைவருடைய திருநாமம்⋆
நங்கள் வினைகள் தவிர உரைமின்⋆ நமோ நாராயணமே (9)

‡வாவித் தடம் சூழ் மணி முத்தாற்று⋆ நறையூர் நெடுமாலை⋆
நாவில் பரவி நெஞ்சில் கொண்டு⋆ நம்பி நாமத்தை⋆
காவித் தடங்கண் மடவார் கேள்வன்⋆ கலியன் ஒலி மாலை⋆
மேவிச் சொல்ல வல்லார் பாவம்⋆ நில்லா வீயுமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com